பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

29 10 2025 6 45

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடு முழுவதுமுள்ள விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. சிறந்த சமுதாயத்தை உருவாக்க ஆன்மிகம் தழைத்தோங்குவது அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.
3. தமிழக விவசாயிகளின் உரத் தேவையை பூர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.
4. சம்பா நெற்பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், பயிர்க்காப்பீடு செய்து பயனடையுமாறு மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.
5. இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதலாவது ட்வெண்ட் ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடு முழுவதுமுள்ள விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ரபி பருவ சாகுபடிக்கான பாஸ்பரஸ் மற்றும் பொட்டாஷ் உரங்களுக்கான மான்யத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரவையின் இந்த முடிவு, உணவு வழங்குபவர்களுக்கு குறைந்த விலையில் உரம் கிடைக்கச் செய்வதோடு, அவர்களது வருவாயை அதிகரிக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

சிறந்த சமுதாயத்தை உருவாக்க ஆன்மிகம் தழைத்தோங்குவது அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கோவையில், பேரூர் ஆதீனம் சாந்தலிங்க அடிகளாரின் நூற்றாண்டு விழாவில் பேசிய அவர், பேரூர் ஆதீன மடம், ஆன்மிகம், சமுதாய வளர்ச்சி மற்றும் தமிழ் மொழிக்காக ஆற்றிவரும் பணிகளை பாராட்டினார்.

இந்த மடத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ள மருத்துவமனை, ஏழை, எளியோருக்கு சிறந்த மருத்துவ சேவையை வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய பேரூர் ஆதீனம் மருதாச்சல அடிகளார், கிராமப் பகுதிகளுக்குச் சென்று சாதி வேற்றுமைகளை அகற்ற பாடுபட்டு வருவதை சுட்டிக்காட்டிய அவர், இங்குள்ள தமிழ்க் கல்லூரி, தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக அதிக ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

பின்னர் தமது சொந்த ஊரான திருப்பூர் சென்ற குடியரசு துணைத்தலைவருக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.

அதனைத் தொடர்ந்து திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், திருப்பூர் குமரன் சிலைக்கும், காந்தி சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

<<<<>>>>

தமிழக விவசாயிகளின் உரத் தேவையை பூர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மத்திய ரசாயன உரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில், நடப்பு சம்பா பருவத்தில் பயிர் சாகுபடி முழுவீச்சில் நடைபெற்று வரும் நிலையில், உர நிறுவனங்கள் உரிய நேரத்தில் உரம் வழங்குவதை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

குறிப்பாக யூரியா உள்ளிட்ட நேரடி உரங்களுக்கான தேவை, வரும் நாட்களில் பெருமளவில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் மாநில அரசு கோரியுள்ளபடி யூரியா, DAP, M.O.P மற்றும் NPK கலப்பு உரங்களை உரிய நேரத்தில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் முதலமைச்சர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

சம்பா நெற்பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், பயிர்க்காப்பீடு செய்து பயனடையுமாறு மாநில வேளாண் அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், பயிர்க் காப்பீடு குறித்து வேளாண்துறை அலுவலர்கள் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு அறிவுறுத்தினார்.

கடன் வெறும் விவசாயிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும், கடன் பெறாத விவசாயிகள் பொது சேவை மையங்கள் மற்றும் தேசிய பயிர்க் காப்பீட்டு இணையதளம் வாயிலாக நேரடியாக காப்பீடு செய்துகொள்ளுமாறும் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக - பிஜேபி கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் தோல்வி பயம் காரணமாக வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்தை எதிர்ப்பதாகக் கூறினார்.

முன்னதாக விராலிபட்டி கிராமத்தில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்திலும் திரு. நயினார் நாகேந்திரன் பங்கேற்றார்.

<<<<>>>>

உலக பக்கவாத தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

“ஒவ்வொரு நொடியும் கணக்கிடப்படுகிறது” என்பதே, இந்த ஆண்டின் மையக் கருத்தாகும்.

பக்கவாதத்தால் பாதிக்கப்படுபவரை, குறிப்பிட்ட நேரத்திற்குள் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தால், பாதிப்பிலிருந்து மீண்டுவரலாம் என்கிறார், வேலுர் முன்னாள் படைவீரர் பங்களிப்பு சுகாதாரத் திட்ட இயன்முறை மருத்துவர் புன்னியகோடி.

<<<<>>>>

நாகை மாவட்டத்தில் சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல் மற்றும் ஆதார் அட்டையைப் பயன்படுத்தி பதிவு செய்துகொள்ளலாம் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

வைகை அணையில் இருந்து 55 கிராமங்கள் திட்ட கால்வாய்க்கு இன்று முதல் வினாடிக்கு 150 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதன்மூலம் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி மற்றும் திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை பகுதிகளுக்கு உட்பட்ட 2 ஆயிரத்து 284 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று நீர்வளத்துறை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பாகிஸ்தானின் கராச்சி புறநகர்ப் பகுதியில் இரைப்பை குடல் அழற்சி பாதிப்பு காரணமாக 6 குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர்.

--------------

ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்ஸோ அபே கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர் தமக்கு மன்னிப்பு அளிக்குமாறு கோரியுள்ளார்.

--------------

இந்தியா - பெலாரஸ் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து வெளியுறவுத்துறையின் மேற்கத்திய நாடுகளுக்கான செயலாளர் திரு. சிபி ஜார்ஜ், பெலாரஸ் வெளியுறவுத்துறை துணை அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

--------------

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு மூலம் சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் பயனடைந்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

--------------

மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம், விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் இன்று முதல் 3 நாட்களுக்கு நடைபெற உள்ளது.

--------------

சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்தநாளையொட்டி நடைபெற உள்ள ஒற்றுமை ஓட்டத்திற்கான பிரச்சார சுவரொட்டி, மத்திய இளைஞர் நலத்துறை சார்பில் பெரம்பலூரில் வெளியிடப்பட்டது.

--------------

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் மத்திய மக்கள் தொடர்பக கோவை அலுவலகம் சார்பில், மத்திய அரசின் திட்டங்கள் குறித்த ஒருங்கிணைந்த விழிப்புணர்வு முகாம் பெரியநாயக்கன்பாளையத்தில் நடைபெற்றது.

--------------

சேலத்தில் நடைபெற்ற தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்க செயற்குழுக் கூட்டத்தில் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 45 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

--------------

ஈரோடு நகர கூட்டுறவு வங்கியில் அடகு நகைகள் மாயமான வழக்கில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டு, அவரிடம் இருந்த தங்க நகைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

--------------

உலக தர நிர்ணய தின கொண்டாட்டத்தை ஒட்டி இந்திய தர நிர்ணய அமைவனம் சார்பில் வரும் ஒன்றாம் தேதி கோவையில் நடைபெற உள்ள மாரத்தான் போட்டிக்கான இலச்சினை நேற்று வெளியிடப்பட்டது.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதலாவது ட்வெண்ட் ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இப்போட்டி கேன்பராவில் பிற்பகல் மணி 1.45க்கு தொடங்குகிறது.

-------------

Hylo ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இன்று இந்தியாவின் எஸ்.எம். சுப்பிரமணியன் - மலேசியாவின் J.H. Leong-ஐ எதிர்கொள்கிறார்.

இப்போட்டி ஜெர்மனியின் Saarbrueen நகரில் பிற்பகல் மணி 1.30க்கு நடைபெறும்.

------------

ஆசிய இளையோர் போட்டியின் பளுதூக்குதுல் பிரிவில் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்ற மகாராஜன் ஆறுமுகப் பாண்டியன் மற்றும் ஓட்டப்பந்தயப் பிரிவில்

பதக்கம் வென்ற எட்வினா ஜேசன் ஆகியோருக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

--------------

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியின் கபடி பிரிவில் தங்கம் வென்ற இந்திய மகளிர் அணியின் துணைக் கேப்டன் கார்த்திகாவுக்கு சென்னை மாநகராட்சி சார்பில் 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மேயர் திருமதி பிரியா வழங்கினார்.

<<<<The End>>>>